வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி-15.1.2025 நேரம் மாலை 6.10 மணி

*தலைப்புச் செய்திகள்*

இன்று ராணுவ தினத்தை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர், ராணுவத்தினர் மற்றும் முன்னாள் ராணுவத்தினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்தியா, வளர்ச்சி நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறதே தவிர, நிலப் பரப்பை விஸ்தரிக்கும் எண்ணத்துடன் அல்ல என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் இன்று புதுடெல்லியில், 3-ஆம் கட்ட காசி **தமிழ்** சங்கமம் விழாவிற்கான அறிவிப்பை வெளியிட்டு, இதற்கான அதிகாரப்பூர்வ இணைய தளத்தை தொடக்கி வைத்தார்.

காரைக்காலில், மாவட்ட நிர்வாகமும், பல்வேறு அரசுத் துறைகளும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள **காரைக்கால் கார்னிவெல் விழா** மற்றும் **மலர் கண்காட்சி**, நாளை தொடங்க உள்ளது.

*ராணுவ தினம்*

இன்று ராணுவ தினத்தை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர், ராணுவத்தினர் மற்றும் முன்னாள் ராணுவத்தினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். தேசியப் பாதுகாப்பை பராமரித்து, நாட்டில் அமைதியான சூழலை ஏற்படுத்துவதன் மூலம், வளம் மற்றும் வளர்ச்சியை ராணுவத்தினர் உறுதிப்படுத்துவதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு பாராட்டி உள்ளார். தாய்நாட்டிற்கான சேவையில் ராணுவத்தினரின் தியாகங்களை, நாடு நன்றியுடன் நினைவில் கொள்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி சமூக ஊடகத்தில் வெளியிட்டுள்ள செய்தியில், கோடிக்கணக்கான இந்தியர்களை பாதுகாக்கும் ராணுவத்தினர் மற்றும் அவர் தம் குடும்பத்தினரின் நலன்களை மேம்படுத்த அரசு உறுதி

பூண்டுள்ளதாகவும் இதற்கென நவீன மயம் மற்றும் பல்வேறு சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். அர்ப்பணிப்பு, தொழில்முறை திறன்கள், மற்றும். மனஉறுதிக்கு பெயர் பெற்ற இந்திய ராணுவத்தினர், இயற்கை பேரிடர் காலங்களில் மக்களுக்கு ஆற்றும் மனிதாபிமான சேவைகளும் போற்றத் தக்கவை என்று கூறி உள்ளார்.

மோடி-மும்பை

இந்தியா, வளர்ச்சி நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறதே தவிர நிலப்பரப்பை விஸ்தரிக்கும் எண்ணத்துடன் அல்ல என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். மும்பையில் இன்று கடற்படை தளத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஐஎன்எஸ் சூரத், ஐஎன்எஸ் நீலகிரி உட்பட 3 முன்னணி போர்க் கப்பல்களை, கடற்படையின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்து வைத்துப் பேசிய அவர் இந்தோ-பசிபிக் பிராந்தியத்தை, அனைத்து நாடுகளுக்கான, வளமான, பாதுகாப்பான, திறந்தநிலை பிராந்தியமாக பராமரிப்பதே, இந்தியாவின் நீண்டகால நிலைப்பாடு என்றார். பிரதமரின் உரையில் இடம் பெற்ற மேலும் சில தகவல்கள்.........

மோடி-மும்பை

இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வு காண்பதில் முதல் நாடாக இந்தியா நிற்பதாக, பிரதமர் கூறினார். தேசிய மற்றும் சர்வதேச அளவிலான பல்வேறு கப்பல்களை இந்தியா பாதுகாத்து, நூற்றுக் கணக்கிலான உயிர்களை காப்பாற்றி இருப்பதால், இந்தியா மீதான உலகின் நம்பிக்கை அதிகரித்து இருப்பதாக அவர் தெரிவித்தார். கடல் பரப்பை கப்பல் போக்குவரத்துக்கு ஏற்றதாகவும், கப்பல் துறையின் வளர்ச்சிக்கு ஏற்றதாகவும் பராமரிக்கும் அதேவேளை, மீன்வளம் உள்ளிட்ட கடல்சார் இயற்கை ஆதாரங்களின் தவறான பயன்பாட்டை தடுக்க வேண்டியதும் அவசியம் என்று அவர் வலியுறுத்தினார்.

இன்று ஒரே சமயத்தில், நீர் மூழ்கி கப்பல் உட்பட 3 வகை கப்பல்கள் பயன்பாட்டிற்கு வருவதால், இன்றைய தினம், இந்தியாவின் கடல் சார் பாரம்பரியத்திலும் இந்திய கடற்படையின் மகத்தான வரலாற்றிலும், பெருமைக்குரிய நாளாகும் என்று பிரதமர் கூறினார். கடந்த 10 ஆண்டுகளாக இந்தியாவின் பாதுகாப்புத் துறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சுயசார்பு இயக்கத்திலும் இன்றைய தினம் முக்கிய நாளாக அமைந்திருப்பதாக அவர் தெரிவித்தார். இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தி, ஒன்றேகால் லட்சம் கோடி ரூபாயை தாண்டி அதிகரித்து இருப்பதாகவும், தற்போது இந்தியா, நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு, ஆயுதங்களை ஏற்றுமதி செய்து வருவதாகவும் அவர் கூறினார்.

3 போர்க் கப்பல்களின் அர்ப்பணிப்பு விழாவில், பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், பாதுகாப்புத் துறையில் இவ்வாண்டு, முக்கிய சீர்திருத்தங்களின் ஆண்டாக அமையும் என்றார். மகாராஷ்டிர ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவீஸ் உள்ளிட்டவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*திருவள்ளுவர்-தினம்*

திருவள்ளுவர் தினமான இன்று பிரதமர் திரு நரேந்திர மோடி, தெய்வப் புலவர் திருவள்ளுவருக்கு புகழாரம் சூட்டி உள்ளார். திருவள்ளுவரின் திருக்குறள், தமிழர் பண்பாடு மற்றும் தத்துவ மரபுகளின் சாரத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்திருப்பதாக சமூக ஊடகப் பதிவு ஒன்றில் பிரதமர் கூறி உள்ளார். திருவள்ளுவரின் போதனைகள் அறம், கருணை மற்றும் நீதியை வலியுறுத்துவதாக அவர் தெரிவித்துள்ளார். காலம் கடந்து நிற்கும் திருவள்ளுவரின் திருக்குறள் மக்களுக்கான உணர்வூக்கச் சுடராகவும், பல்வேறு பிரச்சனைகளுக்கு ஆழ்ந்த அகப் பார்வை வழங்குவதாகவும் அமைந்திருப்பதாக பிரதமர் கூறி உள்ளார்.

*திருவள்ளுவர்-புதுச்சேரி*

திருவள்ளுவர் தினம் இன்று புதுச்சேரியில் அரசு சார்பில் கொண்டாடப்பட்டது. புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள திருவள்ளுவர் சிலைக்கு, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம், அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உடன் இருந்தனர்.

*காசி-தமிழ்*

மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் இன்று புதுடெல்லியில், 3-ஆம் கட்ட காசி தமிழ் சங்கமம் விழாவிற்கான அறிவிப்பை வெளியிட்டு, இதற்கான அதிகாரப்பூர்வ இணைய தளத்தையும் தொடக்கி வைத்தார். இவ்வாண்டு காசி தமிழ் சங்கமம் விழா, அடுத்த மாதம் 15-ஆம் தேதி முதல் 24-ஆம் தேதி வரை 10 நாட்களுக்கு நடைபெறும் என்று அவர் தெரிவித்தார்.

கலை-கைவினைக் கலைஞர்கள், புதுமை படைப்பாளர்கள் உட்பட, சுமார் ஆயிரத்து 200 பிரதிநிதிகள் விழாவில் பங்கேற்பார்கள் என்றும் மாணவர்கள். ஆசிரியர்கள், பெண்கள், சிறு தொழில் முனைவோர் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் இதில் அடங்குவர் என்று அமைச்சர் தெரிவித்தார். இவர்களில் மத்திய பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த சுமார் 200 தமிழ்

மாணவர் குழுவினர், வாரணாசி, பிரயாக் ராஜ், மற்றும் அயோத்திக்கு அழைத்துச் செல்லப்படுவார்கள் என்றும் அவர் கூறினார். இவ்வாண்டு காசி **தமிழ் சங்கமம்** விழா, சித்த மருத்துவத்திற்கும், பழந்தமிழ் இலக்கியத்திற்கும் **அகஸ்திய** முனிவர் ஆற்றிய முக்கிய பங்களிப்புகளை போற்றும் வகையில் அமைய உள்ளது.

*கும்பமேளா*

உத்தரபிரதேஷ் மாநிலம் பிரயாக் ராஜில் நடைபெறும் மகா கும்பமேளாவின் 3-ஆம் நாளான இன்று விஷ்வ ஹிந்து பரிஷத் முகாமில் அயோத்தியில் உள்ளது போன்ற பால ராமர் சிலை நிறுவப்பட்டு அதன் திறப்பு விழா நடைபெற்றது. 2-ஆம் நாளான நேற்று மகர சங்கராந்தி நாளில், 4 கோடிக்கும் மேற்பட்டோர் புனித நீராடியதாகவும், அங்குள்ள எமது நிருபர் தெரிவிக்கிறார். ……………………

*காரைக்கால்-கார்னிவெல்*

காரைக்காலில், மாவட்ட நிர்வாகமும், புதுச்சேரி அரசின் கலை-பண்பாட்டு துறை, சுற்றுலாத் துறை மற்றும் வேளாண் துறையும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள **காரைக்கால் கார்னிவெல் விழா** மற்றும் **மலர் கண்காட்சி**, நாளை முதல் வரும் 19-ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. விழா நடைபெற உள்ள காரைக்கால் விளையாட்டு மைதானத்தை, குடிமைப் பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு பி ஆர் என் திருமுருகன் இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். விழாவிற்கு வரும் பொது மக்களுக்கான போக்குவரத்து, குடிநீர்,கழிவறை, பாதுகாப்பு மற்றும் மருத்துவ வசதிகள் குறித்தும் அவர் ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சியர் திரு அர்ஜுன் ராமகிருஷ்ணன், முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர் திருமதி லட்சுமி சவ்ஜன்யா, மற்றும் இதர அதிகாரிகள் உடன் இருந்தனர்.

**காரைக்கால் கார்னிவெல்** விழாவை ஒட்டி டி ஆர் பட்டிணம் பிப்டிக் மைதானத்தில் இன்று நடைபெற்ற கிரிக்கெட் போட்டிகளையும் முன்னதாக அமைச்சர் தொடக்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர் திரு நாக தியாகராஜன் மற்றும் அதிகாரிகள் நிகழ்ச்சியல் கலந்து கொண்டனர். காரைக்கால் கார்னிவெல் விழா குறித்து மேலும் சில தகவல்கள்………

**காரைக்கால் கார்னிவெல்** விழாவின் தொடக்க தினமான நாளை மாலை, **நகைச்சுவை பட்டிமன்றம்** இடம் பெற உள்ளது. நாளை இரவு 8 மணிக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி விழாவில் உரையாற்ற இருக்கிறார். அதனைத் தொடர்ந்து **இசை இரவு** நிகழ்ச்சி இடம் பெறும். வரும் 17-ஆம்

தேதி வெள்ளிக் கிழமை மாலை நாட்டுப்புற இசை உள்ளிட்ட நிகழ்ச்சிகளும், 18-ஆம் தேதி சனிக்கிழமை இசை இரவு நிகழ்ச்சியும் இடம் பெற உள்ளன. வரும் 19-ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை நடன நிகழ்ச்சியும், நிறைவு விழா மற்றும் பரிசளிப்பு விழாவும் நடைபெறும். காரைக்கால் கார்னிவெல் கலைவிழா நிகழ்ச்சிகளை புகழ்பெற்ற கலைஞர்கள் வழங்க உள்ளனர். விழாவின் ஒரு பகுதியாக, வேளாண் திருவிழா, உணவுத் திருவிழா மற்றும் நாய்கள் கண்காட்சி உள்ளிட்ட நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது,

*ரங்கசாமி-சந்திப்பு*

புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி இன்று ராஜ்நிவாசில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதனை சந்தித்து, பொங்கல் வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டார்.

*அமித் ஷா-பாஸ்போர்ட்*

இந்தியாவிற்கு வரும் சர்வதேச பயணிகளுக்கு முன் கூட்டிய ஆன்-லைன் பதிவின் அடிப்படையில், விமான நிலையத்தில் வைத்தே குடிபெயர்வு அனுமதியை விரைந்து வழங்க, மும்பை, சென்னை, கொல்கத்தா, பெங்களூர், ஐதராபாத், கொச்சி மற்றும் அகமதபாத் விமான நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள புதிய ஃபாஸ்ட்-டிராக் வசதியை, மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா நாளை தொடக்கி வைக்கிறார். இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ள விரும்புவோர், குடிபெயர்வு அனுமதிக்கு தேவையான விவரங்கள் மற்றும் ஆவணங்களை, அதற்கான பிரத்யேக இணைய தளத்தில் முன் கூட்டியே பதிவேற்றம் செய்ய வேண்டும் என்றும், இத்தகைய பயணிகளின் கைரேகைப் பதிவு, விமான நிலையத்திலேயே பெறப்பட்டு அனுமதி வழங்கப்படும் என்றும் மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. புதுடெல்லி இந்திராகாந்தி சர்வதேச விமான நிலையத்தில், கடந்த ஆண்டு ஜுன் மாதம் முதல் ஏற்கனவே செயல்பட்டு வரும் இந்த வசதி, நாட்டின் 21 முக்கிய விமான நிலையங்களுக்கு நீட்டிக்கப்படும் என்றும் அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

*நாடாளுமன்ற-போட்டி*

ஜவஹர் நவோதயா பள்ளி மாணவர்களுக்கான, 25-ஆவது தேசிய இளையோர் நாடாளுமன்ற போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளிக்கும் விழா, புதுடெல்லியில் நாளை நடைபெற உள்ளது. நாடாளுமன்ற விவகாரங்கள் துறை இணை அமைச்சர் திரு அர்ஜுன்ராம் மேக்வால், இவ்விழாவிற்கு தலைமை ஏற்று, பரிசுகளை வழங்கி சிறப்பிக்கிறார். 25-வது நாடாளுமன்ற போட்டியில் நாட்டின் பல்வேறு பகுதிகளில் செயல்படும் 80 நவோதயா வித்யாலயா பள்ளிகளின் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

*காங்கிரஸ்-அலுவலகம்*

புதுடெல்லியில் காங்கிரஸ் கட்சியின் புதிய தலைமையகமான இந்திரா பவன் கட்டிடத்தை, கட்சி தலைவர் திரு மல்லிகார்ஜுன கார்கே, காங்கிரஸ் நாடாளுமன்ற குழுவின் தலைவர் திருமதி சோனியாகாந்தி ஆகியோர் திறந்து வைத்தனர். மக்களவை எதிர்கட்சி தலைவர் திரு ராகுல்காந்தி, நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி பிரியங்கா வாத்ரா, மற்றும் மூத்த காங்கிரஸ் தலைவர்கள் பலரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*டெல்லி-தேர்தல்*

டெல்லி சட்டமன்ற தேர்தலில் வேட்பு மனு தாக்கல் தீவிரமடைந்து வருகிறது. இன்றைய தினம் ஆம் ஆத்மி கட்சியின் தலைவர் திரு அரவிந்த் கேஜரிவால் மூத்த பிஜேபி தலைவர் திரு பர்வேஷ் வர்மா ஆகியோர் புதுடெல்லி சட்டமன்றத் தொகுதியிலும் முன்னாள் மாநில பிஜேபி தலைவர் திரு சதீஷ் உபாத்யாய் மாளவியா தொகுதியிலும் வேட்புமனு தாக்கல் செய்தனர். கல்காஜி சட்டமன்றத் தொகுதியில் பிஜேபி வேட்பாளர் திரு ரமேஷ் பிதூரி வேட்புமனு தாக்கல் செய்தார். ஆம் ஆத்மி கட்சி, கடந்த 10 ஆண்டுகளாக டெல்லியில் மேற்கொண்ட பணிகளின் அடிப்படையில் நடப்பு தேர்தலில் போட்டியிடுவதாக திரு அரவிந்த் கேஜரிவால் செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார். தலைநகர பிரதேசத்தின் வளர்ச்சிக்கான நீண்டகால திட்டம் எதுவும் பாரதிய ஜனதாவிடம் இல்லை என்றும் அவர் குற்றம் சாட்டினார். புதுடெல்லி சட்டமன்ற தொகுதியில் பாரதிய ஜனதா கட்சி தான் வெற்றி பெறும் என்று திரு பர்வேஷ் வர்மா நம்பிக்கை வெளியிட்டார்.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

இன்று ராணுவ தினத்தை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர், ராணுவத்தினர் மற்றும் முன்னாள் ராணுவத்தினருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இந்தியா, வளர்ச்சி நோக்கத்துடன் செயல்பட்டு வருகிறதே தவிர, நிலப் பரப்பை விஸ்தரிக்கும் எண்ணத்துடன் அல்ல என்று, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.

மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான் இன்று புதுடெல்லியில், 3-ஆம் கட்ட காசி தமிழ் சங்கமம் விழாவிற்கான அறிவிப்பை வெளியிட்டு, இதற்கான அதிகாரப்பூர்வ இணைய தளத்தை தொடக்கி வைத்தார்.

காரைக்காலில், மாவட்ட நிர்வாகமும், பல்வேறு அரசுத் துறைகளும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள காரைக்கால் கார்னிவெல் விழா மற்றும் மலர் கண்காட்சி, நாளை தொடங்க உள்ளது.

---------------------------------------